**இறந்த நபரின் வசிப்பிடத்தை நிரூபணம் செய்வதற்கு கீழ்க்கண்டவற்றுள் ஏதேனும் ஒரு ஆவணம்**

1. ஆதார் அட்டை
2. வாக்காளர் அடையாள அட்டை
3. பாஸ்போர்ட்
4. வங்கி கணக்கு புத்தகம் / அஞ்சலக சேமிப்பு புத்தகம்
5. ஓட்டுனர் உரிமம்
6. ஓய்வூதிய ஆணை

(5-1) வாழ்க்கை துணையில் (தம்பதிகளில்) ஒருவர் உயிரோடிருந்தால் - அவரே மனுதார் - அவர் மனுவுடன் கீழ்க்கண்ட ஆவணங்கள் தாக்கல் செய்ய வேண்டும்.

★ திருமணப் பதிவுச் சான்று (அ) பாஸ்போர்ட் (அ) வாக்காளர் அடையாள அட்டை (அ) ஆதார் அட்டை (அ) தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்பு பதிவு ஆவணம் (இவை இறந்தவருடனான உறவு முறையே குறிக்க வேண்டும்)
★ குழந்தைகளின் பிறப்புச் சான்று (அ) பள்ளி மாற்றுச் சான்று
★ வாரிசுகள் குறித்த மனுதாரின் சுய வாக்குமூலம்

(5-2) பெற்றோர் இருவரம் இறந்து போயிருந்தால் குழந்தைகளில் யாரேனும் ஒருவர் கீழ்க்கண்ட ஆவணங்களுடன் மனுச் செய்ய வேண்டும்.

**அ. மனுதார் மேஜராக இருந்தால்**

★ பெற்றோரின் இறப்புச் சான்று
★ அனைத்து வாரிசுதாரர்களின் பிறப்புச் சான்று, (அ) சாதிச் சான்று (அ) பாஸ்போர்ட் (அ) ஆதார் (அ) பள்ளி மாற்றுச் சான்று (அ) தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆவணம் (அ) பணியாளரின் பணிப் பதிவேடு பதிவுகள்

**ஆ. மனுதார் மைன்ராக இருந்தால் பாதுகாவலர் (Guardian) மனுச் செய்யலாம் மனுவுடன் கீழ்க்கண்ட ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட வேண்டும்.**

★ பெற்றோரின் இறப்புச் சான்று
★ அனைத்து வாரிசுதாரர்களின் பிறப்புச் சான்று (அ) பள்ளி மாற்றுச் சான்று (அ) தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆவணம் (அ) பணியாளரின் பணிப் பதிவேடு பதிவுகள் (அ) சாதிச் சான்று (அ) பாஸ்போர்ட் (அ) வாக்காளர் அடையாள அட்டை (அ) ஆதார்.
★ வாரிசுதார்களுடனான உறவு முறை குறித்த சிவில் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட பாதுகாப்பாளர் ஆணை (Guardianship order)

(5-3) இறந்தவர் திருமணம் ஆகாதவர் எனில் பெற்றோர் அல்லது ஒரு தாய் வழி பிறப்பாளர்கள் கீழ்க்கண்ட ஆவணங்களுடன் மனுச் செய்யலாம்.

- ★ இறந்த நபரின் இறப்புச் சான்று
- ★ இறந்தவருடனான உறவு குறித்து விளக்கும் ஏதாவது ஒரு ஆவணம் (பிறப்புச் சான்று, பள்ளி மாற்றுச் சான்று போன்றது)
- ★ சுய வாக்குமூலம் / வாக்குறுதி

**6. வாரிசுச் சான்று கோரும் மனு கீழ்க்கண்ட முறைப்படி நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்**

மனு கட்டணம் ரூ. 60/- மனுதார் இகுஇ மூலமாகவோ, ஆன்லைன் மூலமாகவோ மனுச் செய்யலாம், மனுச் செய்த நாளிலிருந்து 15 வேலை நாட்களில் சான்றுணு வழங்கப்பட வேண்டும்.

**பணி செய்ய வேண்டிய நடைமுறை**

CSC - கிநிஅ = > வரு.ஆய் => த.இ.து.வ = வட்டாட்சியர்

கிராம நிர்வாக அலுவலர் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை பரிசீலனை செய்து மனுவை ஏற்று சான்று வழங்கலாமா? அல்லது நிராகரிக்கலாமா? என்ற தனது பரிந்துரையை 5 நாட்களுக்குள் வருவாய் ஆய்வாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும் வருவாய் ஆய்வாளர் தன்னுடைய விசாரணை முடித்து 4 நாட்களுக்குள் வட்டாட்சியருக்கு அனுப்ப வேண்டும். வட்டாட்சியர் தனது விசாரணையை முடித்து 6 நாட்களுக்குள் மனுதாரருக்கு சான்று வழங்க வேண்டும். (VAO.5+RI.4+ Tahsildar. 6 days = 15 days)

- ★ மனுதாரருக்கு SMS கிடைக்கப் பெற்றதும் இணைய வசதியுள்ள எந்த இடத்திலும் சான்றை பதிவிறக்கம் (download) செய்து கொள்ளலாம்.
- ★ மாவட்டத்தில் இதற்கென தனியாக ஒரு வெப்சைட் உருவாக்கப்பட வேண்டும்.

வழங்கப்பட்ட வாரிசுச் சான்றின் நகல் Reginet சாப்ட்வேரில் இணைக்கும் பொருட்டு பதிவுத் துறைக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**7. பொதுவான அறிவுரைகள்**

வட்டாட்சியர்கள் கீழ்க்கண்ட இனங்களுக்கு சான்று வழங்கக் கூடாது. மனுதாரை உரிய நீதிமன்றம் மூலம் சான்று பெற்றுக் கொள்ள அறிவுறுத்த வேண்டும்.

- ★ இறந்தவருக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட மனைவியோ/கணவரோ இருக்கும்போது
- ★ இறந்தவரின் சொத்துகளில் பிரிவினையில் பிரச்சனை ஏற்படும்போது
- ★ ஒருவர் 7 ஆண்டுகசள் காணாமல் போனதாலோ அல்லது குடும்பத்தை விட்டுச் சென்றதாலோ இறந்ததாக அறிவிக்கப்பட்ட இனங்களில்
- ★ இறந்தவருக்கு குழந்தை இல்லாத நிலையிலோ அல்லது தத்து எடுக்கப்பட்ட நிலையிலோ
- ★ இந்திய வாரிசுரிமைச் சட்டம் 1925-ன் கீழ் வரக்கூடிய இனங்களுக்கு

**8. மேல்முறையீடு**

வட்டாட்சியரால் வழங்கப்பட்ட வாரிசுச் சான்றில், முரண்பாடுகள் ஏற்படும் நிலையில் திருத்தங்கள் செய்ய வேண்டி சான்று வழங்கப்பட்ட நாளிலிருந்து ஓராண்டிற்குள் சம்பந்தப்பட்ட கோட்டாட்சியரிடம் மேல் முறையீடு செய்து கொள்ளலாம்.

9. புனராய்வு அதிகாரம்

வட்டாட்சியரால் வழங்கப்பட்ட வாரிசுச் சான்றில் மாற்றியமைக்க அல்லது திருத்தியமைக்க வேண்டுமெனில் சான்று பெற்ற மூன்று ஆண்டுகளுக்குள் மாவட்ட ஆட்சியருக்கு புனராய்வு மனுச் செய்ய வேண்டும்.

அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் இந்த சுற்றறிக்கையை உரிய கீழ்நிலை அலுவலர்களுக்கு அனுப்பி சுற்றறிக்கையை பின்பற்றி வாரிசுச் சான்று வழங்க அறிவுறுத்தும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. இந்த சுற்றறிக்கையைப் பெற்றுக் கொண்டமைக்கு உடன் ஒப்புதல் அளிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(ஓம்) **K. சத்தியகோபால்**
முதன்மை செயலாளர் மற்றும்
வருவாய் நிர்வாக ஆணையர்

---

## நிர்வாகம் - களப்பணியாளர்கள் - மாற்றுவழி உத்தரவு - இரத்து செய்வது குறித்து அறிவுறுத்தல் வழங்குவது தொடர்பாக வாரியத்தின் கடிதம்

# தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்

**தலைமைப் பொறியாளர்/வணிகம் அலுவலகம்,**
சென்னை - 2.

**குறிப்பாணை எண். த.பொ./வணிகம்/மே.பொ./வணிகம்/செ.பொ.3/உ.செ.பொ.3/கணினியுடன் நேரடி விண்ணப்பம்/D.66/2016 நாள்: 05.08.2016**

**பொருள் : மின்சாரம் - இணையதளம் வாயிலாக குறைந்த அழுத்த மின் இணைப்பு தொடர்புடைய (குடிசை மற்றும் விவசாயம் அல்லாத புதிய மின்இணைப்பு/கூடுதல் மின்பளு அல்லது மின்பளு குறைப்பிற்கான விண்ணப்பங்களை கணினியில் இணையதளம் மூலமாக நேரடியாக விண்ணப்பித்தல் - செயல்முறை அறிவுரை வழங்குதல் - குறித்து.**

**பார்வை : (நி) (த.மே.இ.) த.மி.உ.ம.ப.க. செயல்முறை ஆணை எண். 362, நாள்: *04.08.2016*.**

பார்வையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, இணையதளம் வாயிலாக குறைந்த அழுத்த மின் இணைப்பு தொடர்புடைய (குடிசை மற்றும் விவசாயம் அல்லாத) புதிய மின்இணைப்பு / கூடுதல் மின்பளு அல்லது மின்பளு குறைப்பு ஆகியவைகளை கணினியில் நேரடியாக விண்ணப்பிக்கும் வழியை தமிழகம் முழுவதும் செயல்படுத்த த.மி.உ.ம.ப. கழகம் செயல்முறை ஆணை வெளியிட்டுள்ளது. இதன் தொடர்பாக, புதிய மின் இணைப்புகள்/கூடுதல் மின்பளு அல்லது மின்பளு குறைப்புகளை விண்ணப்பிப்பதற்கான விண்ணப்பம் வலைதளத்திலிருந்து பெறுவதற்கான செயல்முறை அறிவுரைகள் பின்வருமாறு:

1. பொதுமக்களுக்கு பெரிதளவில் அறியும் விதத்தில் த.மி.உ.ம.ப.கழ அனைத்து அலுவலகங்களிலும் அதாவது பிரிவு அலுவலகம், உட்கோட்ட அலுவலகம், கோட்ட அலுவலகம், வட்டம், மண்டல அலுவலகங்கள் மற்றும் அனைத்து மின்கட்டண வசூல் மையங்களில் குறிப்பாக பலகைகள்/ விளம்பரபட்டிகைகளில் கணினியில் நேரிடையாக விண்ணப்பிக்கும் திட்டத்தை விளம்பரப்படுத்த வேண்டும் என்று மின்பகிர்மான வட்டங்களிலுள்ள மேற்பார்வைப் பொறியாளர்களுக்கு அறிவுரை வழங்கப்படுகின்றது. இது தொடர்பாக, மின் பகிர்மான வட்டங்களில் உள்ள செயற்பொறியாளர்கள்/ பொது, களத்தில் ஒத்துழைத்து, ஒரு மாதத்திற்குள் கணினியின் நேரியைடாக விண்ணப்பிக்கும் செய்தியை பலகைகள்/விளம்பரபட்டிகைகளில் வெளியிட செய்யப்படும் ஏற்பாடுகளின் உறுதி விவர அறிக்கையினை அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

2. வாசகர்கள் நிரந்தரமாக பார்க்கும் வகையில் த.மி.உ.ம.ப.கழகம், தமிழ்நாடு மின்தொடர் அமைப்புக் கழகம் மற்றும் தமிழ்நாடு மின்சார வாரிய கழகத்தின் வலைதளங்களின் முதல் பக்கத்தில் காணும் வகையில் ஏற்பாடு செய்யும்படி தலைமைப் பொறியாளர்/தகவல் தொழில்நுட்பம் அவர்களை கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

3. புதிய மின் இணைப்பு/கூடுதல் மின்பளு அல்லது மின்பளு குறைப்பு ஆகியவைகளுக்கான இணையதள விண்ணப்பங்களை ஒவ்வொரு நாளும் கணினிகளில், இயக்குதல் மற்றும் பராமரிப்பு/மின்பகிர்மான பிரிவுகளிலுள்ள உதவி பொறியாளர்கள் சரிபார்க்க வேண்டும். சம்பந்தப்பட்ட உதவி செயற்பொறியாளர்கள் மற்றும் செயற்பொறியாளர்கள் தங்களது கணினிகளில் இணையதள விண்ணப்பங்களை கண்காணிக்க வேண்டும்.

4. விண்ணப்பதாரர்களிடமிருந்து தேவையற்ற ஆவணங்களை கள அலுவலர்களால் கேட்கப்படுவதை தவிர்க்கப்பட வேண்டும். மீறினால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். தமிழ்நாடு மின்பகிர்மான விதித் தொகுப்பில் கூறியுள்ள ஆவணங்களை மட்டுமே விண்ணப்பதாரர்களிடமிருந்து பெற வேண்டும்.

5. பார்வையில் குறிப்பிடப்பட்டுள்ள த.மி.உ.ம.ப. கழக செயல்முறை ஆணையின்படி, இணையதளத்தில் விண்ணப்பங்கள் பெறப்பட்டவுடன் சம்மந்தப்பட்ட பிரிவு அலுவலர்கள் காலதாமதமின்றி உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். விண்ணப்பதாரர் குறிப்பிடும் முகவரி அந்த பிரிவு அலுவலர்களுக்கு தொடர்பு இல்லாமல் அவ்விண்ணப்பத்தினை பெற்றால் அதனை உரிய பிரிவு அலுவலகத்திற்கு காலதாமதமின்றி அனுப்பி வைக்க வேண்டும்.

6. உயர் அழுத்த மின் கம்பிகளுடன் மின்மாற்றியை நிறுவுதல் அல்லது மின் இணைப்பு அல்லது வெறும் சிறிய தாழ்வழுத்த மின் இணைப்பு நீட்டிப்பு போன்றவற்றை தீர்மானிக்கவும் மற்றும் தாழ்வழுத்த மின் இணைப்பு விண்ணப்பத்தினை அடையாளம் கண்டுபிடிக்க, தங்களது பகுதியிலுள்ள பிரிவு அலுவலர்கள் அவர்களுடைய குறைவழுத்த மின் இணைப்பு தொகுப்பு ஏடுகளை சரிசெய்து, தற்பொழுதுள்ள நிலையினை பராமரிக்க வேண்டும். மின்னழுத்த சீர்ப்பாடு, மின்மாற்றியின் மின் திறன் மற்றும் மின்னூட்டிகளின் விவரங்களை வைத்திருப்பது பணியை சுலபமாக்கும்.

7. த.மி.உ.ம.ப. கழகத்தின் https://www.tnebnet.org/awp/login மூலம் அறிவிப்பு/மின்அஞ்சல் (e-mail)/ குறுஞ்செய்தி (SMS) போன்றவை பெறப்பட்ட நாளிலிருந்து 15 நாட்களுக்குள் மதிப்பீடு மற்றும் இதர தொடர்புடைய கட்டணங்களை விண்ணப்பதாரர் செலுத்த வேண்டும். அப்படி 15 நாட்களுக்குள் மதிப்பீடு மற்றும் இதர தொடர்புடைய கட்டணங்களை செலுத்த தவறினால், உரிய தகவலை குறுஞ்செய்தி/மின் அஞ்சல்/ அறிவிப்பு மூலமாக தெரிவிக்கப்பட்ட பின்பு அவ்விண்ணப்பம் நிராகரிக்கப்பட வேண்டும். எனினும், விண்ணப்பதாரரின் சிறப்பு வேண்டுகோளிற்கு இணங்க, அசாதாரணமான தகுதியுற்ற நேர்வுகளில் சம்பந்தப்பட்ட மேற்பார்வை/தலைமைப் பொறியாளர் அவர்கள் மின்நுகர்வோருக்கு அவருடைய கட்டணங்களை செலுத்த கூடுதல் 30 நாட்களை நீட்டித்து தரலாம். எப்பொழுதெல்லாம் விண்ணப்பதாரர்தான் செலுத்த வேண்டிய கட்டணங்களுக்கு, நீட்டிப்பு வழங்கப்பட்ட 45 நாட்களுக்கு மேலாக, நீட்டிப்பு வழங்க வேண்டினால், அவருக்கு கட்டணம் செலுத்தப்படும் கால அளவினை நீட்டித்து வழங்குவது, சம்பந்தப்பட்ட மேற்பார்வை/தலைமைப் பொறியாளர் அவர்களின் விருப்புரிமையாகும்.

8. மின் இணைப்புக்கான குடியிருப்பு விண்ணப்பங்களுக்கு அவ்விண்ணப்பத்துடன் அச்சு நகல்கள் (Hard Copies) மற்றும் அச்சு ஆவண நகல்களை சமர்ப்பிக்க தேவையில்லை. கையொப்பமிடப்பட்ட நகலாக இணையதள விண்ணப்பம் ஏற்கப்படுவது மட்டுமின்றி இதற்கென்று தனியே கையொப்பமிட்ட விண்ணப்ப நகல் சமர்ப்பிக்க தேவையில்லை, மற்றுமின்றி இணையதள விண்ணப்பம் ஒப்பந்தமாக கருதப்படும்.

9. சாதாரண கட்டிடத்திற்கான வீட்டுக்குரிய விண்ணப்பங்களை (சிறப்பு மற்றும் பன்னடுக்கு கட்டிடங்களை தவிர) பொருத்தவரையில், அசல் பரிசோதனை அறிக்கை/மாற்றியமைக்கப்பட்ட பரிசோதனை அறிக்கையில் (OTR/RTR) உரிமம் பெற்ற மின்கம்பியிடும் ஒப்பந்தக்காரரின் கையொப்பத்தை வலியுறுத்த

வேண்டியதில்லை. மாறாக, விண்ணப்பதாரர் தனது விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் தருணத்தில் பின்வரும் உறுதிமொழியினை வழங்கினால் போதுமானது, அவை; ''நான் ................. (விண்ணப்பதாரர் பெயர்) ................ அவர்களின் மகன் ......................................... (மின் இணைப்பு வழங்கப்படும் இடத்தின் முகவரி) இடத்தில் வீட்டுக்குரிய மின் இணைப்பிற்காக விண்ணப்பித்துள்ளேன். 2010 மத்திய மின்சார அதிகார அமைப்பு (Central Electricity Authority) (பாதுகாப்பு மற்றும் மின்சாரம் வழங்கும் நடவடிக்கைகள் தொடர்பான) (Measures relating to safety and electric supply) ஒழுங்குமுறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளபடி மேற்குறிப்பிடப்பட்டுள்ள இடத்திற்கு உரிமம் பெற்ற மின்கம்பியிடும் ஒப்பந்தக்காரரை வைத்துதான் மின்கம்பியிடல் செய்யப்பட்டுள்ளது. மேலும், நான் குறிப்பிடுவதாவது 2003 மின்சார சட்டம், 2010 மத்திய மின்சார அதிகார அமைப்பு ஒழுங்குமுறை விதிகளின்படி மற்றும் பாதுகாப்பு தொடர்புடைய இதர வழிமுறைகளை மேற்கூறிய இடத்தில் பின்பற்றப்பட்டுள்ளது என்பதுடன் மின்சார பாதுகாப்பு தொடர்புடைய ஏதேனும் குறைபாடுகள் காணப்படுமேயானால் அதற்கான முழுப்பொறுப்பையும் நான் ஏற்கிறேன்.''

இணையதளம் வழியாக விண்ணப்பதாரரினால் சமர்பிக்கப்பட்ட OTR/RTR-ஐ கையொப்பமிடப்பட்ட நகலாகவே ஏற்கப்பட வேண்டும்.

(குறிப்பு : நகர் ஊரமைப்பு இயக்ககம் (Directorate of Town and Country Planning - DTCP) வலைதளத்தின் விளக்கப்படி, சாதாரண கட்டிடம் என்பது 2 தளங்கள் வரை கொண்டதாகவும் மற்றும் 4 குடியிருப்புகளுக்கு குறைவாக கொண்டிருக்க வேண்டும். மேற்கூறிய பத்தி 8 மற்றும் 9-இல் குறிப்பிடப்பட்டுள்ள சாதாரண கட்டிடங்களுக்கு இந்த விளக்கம் பொருந்தும்.)

10. எனினும், மின் இணைப்புகள் வழங்கப்படும் பொழுது, 2010 மத்திய மின்சார அதிகார அமைப்பு (பாதுகாப்பு மற்றும் மின்சாரம் வழங்கும் நடவடிக்கைகள் தொடர்பான) ஒழுங்குமுறை விதி 31-இன் படி குடியிருப்பு மின்இணைப்புக்காக விண்ணப்பிப்பவரின் சாதாரண கட்டிடத்தில் உள்ள மின்கம்பியிடல்களின் தரம் சரியாகவுள்ளனவா என்பதனை த.மி.உ.ம.ப. கழக அலுவலர்கள் சரிபார்க்க வேண்டும். OTR/RTR-இல் பெறப்பட்ட பரிசோதனை முடிவுகளின் பதிவேட்டினை அலுவலர்கள் பராமரிக்க வேண்டும். மத்திய மின்சார அதிகார அமைப்பின் ஒழுங்குமுறை விதிகள் கீழே வழங்கப்பட்டுள்ளது.

''31 (1) புது மின் இணைப்பு அல்லது கூடுதல் மின் இணைப்பிற்காக விண்ணப்பம் பெறப்பட்டவுடன் மற்றும் மின் இணைப்பு வழங்குவதற்கு முன்பு அல்லது ஆறு மாதங்களுக்கு பிறகு அதே மின்இணைப்பினை மறுபடியும் வழங்கும்பொழுது, மின் இணைப்பு வழங்குபவர் நேரிடையாக சென்று மின்கம்பியிடல் அமைப்புகளை பரிசோதனை செய்வது அல்லது உரிமம் பெற்ற மின்சார ஒப்பந்ததாரரிடமிருந்து உரிய கையொப்பமிட்ட பரிசோதனை முடிவுகளை மின்நுகர்வோர் சமர்ப்பித்தால் அதனை ஏற்கப்பட வேண்டும்.

(2) அட்டவணை V-இல் நுகர்வோருக்கு வழங்கப்பட்ட ஒவ்வொரு மின் இணைப்பு முனையில் எடுக்கப்பட்ட பரிசோதனை அறிக்கையினை மின்விநியோகிப்பவர் அதனை பராமரிக்க வேண்டும்.''

11. குடியிருப்பு பிரிவில் உள்ள சாதாரண கட்டிடங்களைத் தவிர, சிறப்பு கட்டிடங்கள், பன்னடுக்கு மாளிகைகள், தொழிற்சாலை கட்டிடங்கள், வணிக கட்டிடங்கள் மற்றும் இதர வகையில் உள்ள மின் இணைப்புகளை பொருத்தவரையில் (கல்வி நிறுவனங்கள் ஆகியவை) மின் இணைப்பு வழங்கும்பொழுது மின்நுகர்வோரிடமிருந்து OTR/RTR-ஐ தயார் செய்து கையொப்பமிட்டு பெறப்பட வேண்டும். மேலும், இந்த நிகழ்வுகளில் உரிமம் பெற்ற மின்சார ஒப்பந்ததாரரின் கையொப்பத்தையும் பெற வேண்டும்.

12. காலத்திற்கு காலம் வழங்கப்படும் சுற்றறிக்கைகளின்படி, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் (CMDA) பகுதியிலுள்ள சிறப்பு மற்றும் பன்னடுக்கு கட்டிடங்களுக்கான பணி முடிவுச் சான்றிதழை பெற வேண்டும்.

13. பதிவு கட்டணங்கள் செலுத்தப்பட்ட நாளிலிருந்து மின் இணைப்பு வழங்கப்படும் நாள் வரை இணையதளத்தில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களின் தகுதி நிலையை சம்பந்தப்பட்ட உதவி

செயற்பொறியாளர்கள் அதனை கண்காணிக்க வேண்டும். இணையதளம் வழியாக பெறப்படும் விண்ணப்பங்களுக்கு மின் இணைப்பு வழங்கும் பொறுப்பு, இயக்குதல் மற்றும் பராமரிப்பு உட்கோட்டத்தின் உதவி செயற்பொறியாளருடையது. மின் இணைப்பிற்காக பொருட்களை ஏற்பாடு செய்வது தொடர்பான விவரங்களை உதவி செயற்பொறியாளர் அவர்கள் மின் பகிர்மான கோட்டத்தை சேர்ந்த சம்பந்தப்பட்ட செயற்பொறியாளர் அவர்களின் பார்வைக்கு கொண்டு செல்ல வேண்டும். மின் இணைப்பு வழங்குவதற்கு தேவைப்படும் பொருட்களை ஏற்பாடு செய்வதற்கான பொறுப்பு மின் பகிர்மான கோட்டத்தின் செயற்பொறியாளருடையதாகும்.

14. ஒவ்வொரு வாரமும் இந்த செயல்பாடுகளை கோட்டத்தின் செயற்பொறியாளர் அவர்கள் கண்காணித்து, அதன் அறிக்கையினை ஒவ்வொரு மாதமும் 3ம் தேதி அன்று மின் பகிர்மான வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அவர்களுக்கு அனுப்ப வேண்டும், அதனை ஒவ்வொரு மாதமும் 5ம் தேதி அன்று அவர் சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளர் அவர்களிடம் வழங்க வேண்டும். அட்டவணையில் உள்ள படிவத்தில் கூறியுள்ளபடி மாதாந்திர அறிக்கையாக ஒவ்வொரு மாதம் 15ம் தேதி அன்று இயக்குநர் (மின் பகிர்மானம்) அவர்களிடம் பகிர்மான மண்டல தலைமைப் பொறியாளர்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

15. மின் பகிர்மான வட்டங்களில் இணையதள விண்ணப்பங்களை செயல்படுத்துவதற்கான ஒருங்கிணைப்பு அலுவலர் மின் பகிர்மான வட்டத்தின் செயற்பொறியாளர்/பொது அவர்கள் காலமுறைதோறும் இணையதளம் மூலமாக பெறப்படும் விண்ணப்பங்களை செயற்பொறியாளர்/ பொது அவர்கள் ஆய்வு செய்து தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணையத்தில் வழங்கப்பட்டுள்ள கால அட்டவணைகளுக்கேற்ப மின் இணைப்பு வழங்குவதற்கான தொடர்ப நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். மேலும், இணையதளம் மூலமாக பெறப்படும் விண்ணப்பங்களை வரிசை முறையின்றி பரிசோதனை செய்து, தொடர் நடவடிக்கை எங்கெல்லாம் தேவைப்படுகிறதோ அங்கெல்லாம் தலைமைப் பொறியாளர்/வணிகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

16. விண்ணப்பதாரர்கள் சமர்ப்பிக்கும் ஆவணங்கள் மற்றும் அதனை தொடர்ந்து கள அலுவலர்களால் எடுக்கப்படும் விவரங்கள் போன்றவைகளை பார்வையிட ஏதுவாக மின் பகிர்மான வட்டங்களிலுள்ள செயற்பொறியாளர்/பொது மற்றும் தலைமைப் பொறியாளர்/வணிகம் அவர்களுக்குத் தனித்தனியே பயனீட்டாளர் பெயர் மற்றும் கடவுச் சொல்லை தலைமைப் பொறியாளர்/தகவல் தொழில்நுட்பம் அவர்கள் வழங்க வேண்டும். மேலும், 30 நாட்களுக்கு மேலாக நிலுவையிலுள்ள விண்ணப்பங்கள் மற்றும் காலதாமதம், காலதாமத கட்டணங்களுக்கான காரணங்களை தனி கட்டத்தில் காண்பித்தல், வட்டம் வாரியாக, கோட்டம் வாரியாக பெறப்படும் விண்ணப்பங்கள் போன்ற பல்வகை பட்டியலை உருவாக்கி அதனை மின் பகிர்மான வட்டங்களில் மேற்பார்வைப் பொறியாளர், செயற்பொறியாளர்/ பொது அவர்கள் ஆய்வு செய்யும் பொருட்டு மென்பொருளைய உருவாக்க தலைமைப் பொறியாளர்/ தகவல் தொழில்நுட்பம் அவர்கள் ஏற்பாடு செய்து தரவேண்டும்.

17. மேலும், பதிவு செய்யப்பட்டு 30 நாட்களுக்கு மேலாக நிலுவையிலுள்ள விண்ணப்பங்களை மின் பகிர்மான வட்டத்திலுள்ள செயற்பொறியாளர்/பொது அவர்கள் சிறப்பு ஆய்வு செய்ய வேண்டும். மின் பகிர்மான வட்டத்திலுள்ள மேற்பார்வைப் பொறியாளர் மூலமாக நிலுவையிலுள்ள விண்ணப்பங்கள் தொடர்பாக செய்யப்பட்ட ஆய்வு விவரங்களை சம்மந்தப்பட்ட தலைமைப் பொறியாளர் அவர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

18. சாதாரண கட்டிடங்களின் குடியிருப்பு வகையை பொருத்த வரையில் இணையதளம் மூலமாக பெறப்படும் OTR/RTR-க்கு தனி தொடர் எண்ணை பராமரிக்க வேண்டும்.

19. இணையதளத்தின் மூலமாக வசூலிக்கப்படும் பல்வகை கட்டணங்கள் மற்றும் அதனுடைய ஒத்திவைகளையும் கண்காணிக்க தலைமை நிதிக் கட்டுப்பாட்டு அலுவலர்/வருவாய் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு பயனீட்டாளர்கள் மற்றும் கடவுச் சொல்லை தனித்தனியே வழங்கப்பட வேண்டும். செம்மையான வருவாய் வசூலை பெறுவதற்கு தலைமை நிதிக்

கட்டுப்பாட்டு அலுவலர்/வருவாய் அவர்களுடன் தலைமைப் பொறியாளர்/தகவல் தொழில்நுட்பம் அவர்கள் ஒத்திசைவு தர வேண்டும்.

20. இணையதளம் மூலமாக பெறப்படும் விண்ணப்பங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்ட பின்பு தற்பொழுதுள்ள மின் இணைப்பு வழங்கிய பின் செயல்படுத்தப்பட்டும் நடைமுறைகளை இதற்கும் பின்பற்ற வேண்டும்.

21. இங்கு குறிப்பிடப்படாத தற்பொழுது நடைமுறையிலுள்ள நடைமுறைகளை மின் இணைப்பு வழங்கப்படும் பொழுது தவறாமல் பின்பற்ற வேண்டும். மேலும், குறைந்த அழுத்த மின் இணைப்பு தொடர்பான புது மின் இணைப்பு/கூடுதல் மின்பளு அல்லது மின்பளு குறைப்பு ஆகியவைகளுக்கு, நடப்பில் உள்ள, நேரிடையாக த.மி.உ.ம.ப.க. அலுவலகத்திற்கு வந்து விண்ணப்பிக்கும் நடைமுறையும் பின்பற்ற வேண்டும். மேற்கூறிய நடைமுறைகள் உடனடியாக செயல்படுத்தப்படும். இதன் தொடர்பாக ஏதேனும் பிழை ஏற்பட்டால் அவை கடுமையாக கருதி தவறு செய்யும் அலுவலர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**(தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்/த.மி.உ.ம.ப.க. அவர்களின் ஆணைப்படி)**

**தலைமைப்பொறியாளர்/வணிகம்**
*இயக்குநர் / பகிர்மானம் அவர்களுக்காக*

**இணைப்பு**

இணையதளம் மூலமாக புது மின் இணைப்பு / கூடுதல் மின்பளு அல்லது மின்பளு குறைக்க பெறப்படும் விண்ணப்பங்களுக்கான விவர அறிக்கையை இயக்குநர் (மின் பகிர்மானம்) அவர்களுக்கு மின் பகிர்மான மண்டல தலைமைப் பொறியாளர்கள் வழங்க வேண்டிய படிவம்.

விவர அறிக்கை படிவத்திற்கான மாதம் ..............................

| வ. எண். | வட்டத்தின் பெயர் | இணையதளம் மூலமாக பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | மின் இணைப்பு வழங்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | மின் இணைப்பு வழங்கப்படாத விண்ணப்பங்களின் எண்ணிக்கை | மின் இணைப்பு வழங்கப்படாததற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | | | Mere / Ext. / Dt | Mere / Ext. / Dt | Mere / Ext. / Dt |
| | | | | | |

**தலைமைப்பொறியாளர்/வணிகம்**
*இயக்குநர் / பகிர்மானம் அவர்களுக்காக*

## தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழக நிறுவனம்

**(சுருக்கக் குறிப்பு)**

★★★

மின்சாரம் – இணையதளம் வாயிலாக குறைந்த அழுத்த மின் இணைப்பு தொடர்புடைய (குடிசை மற்றும் விவசாயம் அல்லாத) புதிய மின் இணைப்பு/கூடுதல் மின்பளு அல்லது மின்பளு குறைப்பிற்கான விண்ணப்பம் – தமிழகம் முழுவதும் பின்பற்றத்தக்க வழிமுறைகள் மற்றும் செயல்முறை வழியினை தெரிவித்தல் – குறித்து.

---

## தொழில்நுட்பக் கிளை

### (நிர) (த.(மு.)மே.இ.) த.மி.உ.ம.ப.க செயல்முறை ஆணை எண். 362, நாள்: 04.08.2016

ஆடி : 20
ஸ்ரீ துர்முகி வருடம்
திருவள்ளுவர் ஆண்டு : 2047

**பார்வை :** *(1) 05.02.2015* **நாளிட்ட (நிர) (த.(ம)மே.இ.) செயல்முறை ஆணை எண்.** *59*
*(2) 28.06.2016, 30.06.2016* **மற்றும்** *18.07.2016* **நாளிட்ட தலைவர் (ம) மேலாண்மை இயக்குநர்/த.மி.உ.ம.ப.கழகம் அவர்களால் ஒப்புதல் வழங்கப்பட்ட குறிப்பு.**

பார்வை (1)-இல் குறிப்பிட்டுள்ளபடி, திருத்தியமைக்கப்பட்ட, தெளிவுபடுத்தப்பட்ட மின் மேம்பாடு மற்றும் சீரமைப்பு திட்டத்தின் கீழ் இணையதளம் மூலமாக குறைந்த அழுத்த புதிய மின் இணைப்பு/கூடுதல் மின்பளு அல்லது மின்பளு குறைப்பிற்கான இணையதளம் வழியாக விண்ணப்பிக்கும் முறையை செயல்படுத்த தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் செயல்முறை ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2. தமிழகம் முழுவதும் இணையதளம் மூலமாக குறைந்த அழுத்த புதிய மின் இணைப்பு தொடர்புடையற (குடிசை மற்றும் விவசாயம் அல்லாத) புதிய மின் இணைப்பு/கூடுதல் பளு அல்லது மின்பளு குறைப்பிற்கு விண்ணப்பம் இணையதள விண்ணப்பிக்கும் முறைக்கு தலைவர் (மற்றும்) மேலாண்மை இயக்குநர்/ த.மி.உ.ப.க. அவர்கள் ஒப்புதல் வழங்கியுள்ளார். இந்த இணையதளம் மூலமாக விண்ணப்பிக்கும் செயல்முறையில் புவியியல் தகவல் அமைப்பை நிகழ்நிலையாக்குதல், மதிப்பீடு மற்றும் செயல்முறை செய்தல் உள்ளிட்ட விண்ணப்பத்தினை பதிவு செய்தலில் துவங்கி மின் இணைப்பு வழங்கும் வரை, மதிப்பீடு மற்றும் எல்லா செயல்பாடுகளையும் முழுமையாக தானியங்கி மூலம் செயல்படுவதற்கு (எங்கெல்லாம் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகதத்தில் பொருத்தப்படுமோ) கருத்துரு செய்யப்பட்டுள்ளது.

3. இதன் தொடர்பாக, பார்வை (1)-இல் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் செயல்முறை ஆணையினை ரத்து செய்து, இணையதளம் மூலமாக புதிய மின் இணைப்பு/கூடுதல் பளு/மின் பளு குறைப்புக்கு விண்ணப்பிக்கும் முறையை செயல்படுத்த பின்பற்றப்பட வேண்டிய புதிய நடைமுறை விவரங்கள் பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளது;

1. (www.tangedco.gov.in) என்ற தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழக இணையதளத்தை விண்ணப்பதாரர் திறக்க வேண்டும்.

2. எவ்வகையான விண்ணப்பம் வேண்டும் என்பதனை விண்ணப்பதாரர் தேர்வு செய்து அதன் வகையின்படி புதிய இணைப்பு/ கூடுதல் பளு இணைப்பு/குறைப்பு மற்றும் அதனுடன் பெயர், முகவரி, கைபேசி எண், மின்அஞ்சல் போன்ற தேவைப்படும் விவரங்களை பூர்த்தி செய்ய வேண்டும்.

3. தமிழ்நாடு மின்சாரப் பகிர்மான வித்தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ள, துணை ஆவணங்களை சுய சான்றளித்து ஆவணங்களின் நகலினை இணைத்து இணையதளம் மூலமாக விண்ணப்பதாரர் பதிவு ஏற்றம் செய்ய வேண்டும்.

4. தமிழ்நாடு மின்சார பகிர்மான விதித்தொகுப்பின் விதிகளின்படி துணை ஆவணங்களுடன் விவரங்களை பதிவு செய்து பின்பு, விண்ணப்பதாரர் விண்ணப்பத்தை மற்றும் தேவையான கூடுதல் படிவங்களை இணையதளம் மூலமாக பதிவு ஏற்றம் செய்து சமர்ப்பிக்க வேண்டும்.

5. விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டவுடன் விண்ணப்ப எண் ஒப்புகை மற்றும் பதிவு கட்டணத்திற்கான கேட்பு அறிவிப்பு இணையதளத்தில் உருவாகும்.

6. சமர்பிக்கப்பட்ட விண்ணப்ப படிவம் ஒப்புகை மற்றும் பதிவு கட்டணத்திற்கான கேட்பு அறிவிப்பினை அச்சீடு செய்ய வலைதள இணைப்புகள் இணையதளத்தில் வழங்கப்படும்.

7. தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் URL https://www.tnebnet.org/awp/login - மூலமாக சமர்பிக்கப்படும் விண்ணப்பத்திற்கான பதிவு கட்டணம் விண்ணப்பம் சமர்பிக்கப்பட்ட நாளிலிருந்து 3 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டும் என்ற செய்தி பதிவு கட்டணம் செலுத்துவதற்கான ஒப்புகை மற்றும்

கேட்பு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கும். விண்ணப்பதாரர், விண்ணப்ப படிவத்தை இணையதளம் மூலமாக சமர்ப்பித்த பிறகு, விண்ணப்ப பதிவு கட்டணத்தை இணையதளம் மூலமாகவே செலுத்தலாம்.

8. இணையதளம் மூலமாக தேவையான பதிவு கட்டணங்களை விண்ணப்பதாரர் செலுத்தியவுடன், அவருடைய விண்ணப்பம் உடனடியாக பதிவு செய்யப்பட்டு, அதற்கான பதிவு எண் உருவாக்கப்படும். கூடுதலாக, மின் நுகர்வோர் வழங்கப்பட்ட மின் அஞ்சல்/கைப்பேசி எண் மூலமாக பதிவு விவரங்கள் தெரிவிக்கப்படும்.

9. இணையதளம் வாயிலாக வெற்றிகரமாக விண்ணப்பம் மற்றும் தேவையான ஆவணங்கள் சமர்பிக்கப்பட்டு பதிவு கட்டணங்களை செலுத்தியவுடன், அவற்றின் அடுத்த நடவடிக்கைகளுக்காக நிலுவையிலுள்ள விண்ணப்பம் என்று பட்டியலிடப்படும்.

10. இணையதளம் வாயிலாக விண்ணப்பங்களின் மென் நகல்கள் (Soft Copies) மற்றும் ஆவணங்கள பெறப்பட்ட பின்பு, பதிவு கட்டணம் செலுத்திய நாளிலிருந்து 3 பணி நாட்களில் சம்பந்தப்பட்ட அலுவலரினால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு, மேல் நடவடிக்கை தொடங்கப்படும். விண்ணப்பதாரர் குறிப்பிட்டுள்ளபடி அவருடைய விண்ணப்பம் ஒரு பிரிவிற்கு தொடர்பில்லாமல் காணப்படுமானால் அதனை பெற்றுக் கொண்ட சம்பந்தப்பட்ட அலுவலர் உரிய பிரிவிற்கு உடனடியாக காலதாமதமின்றி அனுப்பி வைக்க வேண்டும்.

11. விண்ணப்பம் மற்றும் ஆவணங்களை சரிபார்ப்பு செயல்முறையின் பொழுது, ஏதேனும் குறைபாடுகள் காணப்படுமேயானால், அதனை சம்பந்தப்பட்ட அலுவலரினால் கணினியில் ஏற்றப்பட்டு, அந்த குறைபாடுகள் விண்ணப்பதாரருக்கு அடுத்த 3 தினங்களுக்குள் தெரியப்படுத்த (மின் அஞ்சல், குறுஞ்செய்தி போன்ற) அறிவிப்பு ஒன்று உருவாக்கப்படும்.

12. இணையதளம் வாயிலாக பெறப்படும் குறைபாடுகளுடன் உள்ள விண்ணப்பத்தினை, விண்ணப்ப ஒப்புகை எண்ணைக் கொண்டு இணையதள பயனாளியினால், சரியான ஆவணங்களை பதிவு ஏற்றம் செய்யவும் / திருத்தியமைப்பதற்காகவும் இணையதளத்தில் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

13. விண்ணப்பத்திலுள்ள குறைபாடுகளை சரிசெய்யப்பட்ட பின்பு, அதனை செயல்முறைப்படுத்துவதற்காக இணையதள விண்ணப்பதாரர் ஆவணங்களின் மென் நகல்களை மறுபடியும் சமர்ப்பிக்கலாம்.

14. எனினும், குறைபாடுகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தினை, குறைபாடுகள் தெரியப்படுத்தப்பட்ட நாளிலிருந்து 7 பணி நாட்களுக்குள் அதனை சரிசெய்து இணையதளம் மூலமாக ஆவணங்களை மறுபடியும் சமர்ப்பிக்கவில்லை என்றால், அதிகாரியினால் அவ்விண்ணப்பம் ரத்து செய்யப்படும் என்ற அறிவிப்பு / மின் அஞ்சல் / குறுஞ்செய்தி மூலமாகவோ விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்படும்.

15. குறைந்த அழுத்த தொழிற்சாலை விண்ணப்பத்தை பொருத்தவரையில், இணையதளம் வாயிலாக பெறப்பட்ட விண்ணப்பம் மற்றும் தேவையான ஆவணங்கள் மென்நகல்கள் அனைத்தும் முழுமையாக காணப்பட்டால், (சம்பந்தப்பட்ட அலுவலரினால் அறிவிப்பு / மின் அஞ்சல் / குறுஞ்செய்தி மூலமாக) ஆவணங்களுடன் விண்ணப்பத்தின் அச்சு (Hard Copies) நகல்களை 3 நாட்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டி விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்படும். ஆவணங்களுடன் கூடிய விண்ணப்பத்தின் நிலைவட்டு நகல்களை சரிபார்த்த பின்பு, 3 நாட்களுக்குள் EMD தொகையினை செலுத்தும்படி அறிவிப்பு / மின் அஞ்சல் / குறுஞ்செய்தி மூலமாக சம்பந்தப்பட்ட அலுவலரினால் விண்ணப்பதாரருக்குத் அறிவிக்கப்படும். தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழக வலைத்தளம் https://www.tnebnet.org/awp/login மூலமாக விண்ணப்பதாரர் தனது EMD தொகையினை செலுத்தலாம். அவ்வாறு 3 தினங்களுக்குள் EMD தொகை செலுத்தப்படவில்லை என்றால், அறிவிப்பு / மின் அஞ்சல் / குறுஞ்செய்தி மூலமாக தங்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படுகின்றது என்று விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்படும்.

16. இணையதள வாயிலாக பெறப்பட்ட ஆவணங்களுடன் கூடிய விண்ணப்பத்தின் மென்நகல்கள் அனைத்து வகையிலும் முழுமையாக காணப்பட்டால், அவ்விண்ணப்பத்துடன் கூடிய முழுமையான ஆவணங்கள் மற்றும் மென்நகல்கள் சமர்ப்பிக்கப்பட்ட 3 தினங்களுக்குள் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, ஒப்புதல் வழங்கப்படும். மின் இணைப்பு வழங்குவதற்கு மின் நீட்டிப்பு/மேம்பாடு உள்ளடங்குமேயானால், முழுமையான வடிவில் பெறப்படும் ஆவணங்களுடன் கூடிய விண்ணப்பத்தின் மென்நகல்கள் பெறப்பட்ட நாளிலிருந்து 15 தினங்களுக்குள் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, ஒப்புதல் வழங்கப்படும். அறிவிப்பு / மின்

அஞ்சல் / குறுஞ்செய்தி மூலமாக உரிய நேரத்திற்குள் மதிப்பீடு மற்றும் பொருந்தப்படும் இதர கட்டணங்கள் செலுத்த வேண்டும் என்று விண்ணப்பதாரருக்குத் தெரிவிக்கப்படும்.

17. அறிவிப்பு/மின் அஞ்சல், குறுஞ்செய்தி பெறப்பட்ட 15 நாட்களுக்குள் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழக வலைத்தளம் https://www.tnebnet.org/awp/login மூலமாக மதிப்பீடு மற்றும் தொடர்புடைய இதர கட்டணங்களை விண்ணப்பதாரர் செலுத்த வேண்டும்.

18. விண்ணப்பதாரரின் குறிப்பிட்ட வேண்டுகோளின்படி, அசாதாரண நேர்வுகளில், மதிப்பீடு மற்றும் இதர தொடர்புடைய கட்டணங்களை நுகர்வோர் செலுத்த, அவருக்கு கூடுதலாக 30 நாட்கள், சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளர் / மேற்பார்வைப் பொறியாளர் அவர்கள் அனுமதி வழங்கலாம். இணையதளம் வாயிலாக விண்ணப்பத்துடன் அனைத்து தேவையான ஆவணங்கள் முழு வடிவில் சமர்ப்பிக்கப்பட்ட நாளிலிருந்து தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய தமிழ்நாடு மின்சாரப் பகிர்மான செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள கால அட்டவணை துவங்கும். கேட்பு அறிவிப்பு வழங்கப்படும் நாளிலிருந்து குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களை (பதிவுக் கட்டணம்/EMD/ மதிப்பீடு மற்றும் பொருந்தப்படும் இதர கட்டணங்கள்) மின் நுகர்வோர் செலுத்தும் வரையிலான காலநேரம் மேற்கூறிய கால அட்டவணையில் அமையாது.

19. மதிப்பீடு மற்றும் பொருந்தக்கூடிய இதர கட்டணங்களை மின் நுகர்வோர் செலுத்திய நாளிலிருந்து, புதிய மின் இணைப்பு/கூடுதல் மின்பளு இணைப்பு/மின்பளு குறைப்புக்கான விண்ணப்பங்கள் வரிசைப்படுத்தப்படும்.

20. மின்இணைப்பு வழங்குவதற்கு முன்பு, CMDA அதிகார எல்லைக்குள் உள்ள சிறப்பு மற்றும் பன்னடுக்கு கட்டிடங்களுக்கு கட்டிடம் கட்டி முடித்து முழுமையடைந்த சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

21. மின் இணைப்புக்கான குடியிருப்பு விண்ணப்பங்களுக்கு அவ்விண்ணப்பத்துடன் அச்சு நகல்கள் (Hard Copies) மற்றும் நிலைவட்டு ஆவண நகல்களை சமர்ப்பிக்க தேவையில்லை. கையொப்பமிடப்பட்ட நகலாக இணையதள விண்ணப்பம் ஏற்கப்படுவது மட்டுமின்றி இதற்கென்று தனியே கையொப்பமிட்ட நகல் வைக்க தேவையில்லை, மற்றுமின்றி இணையதள விண்ணப்பம் ஒப்பந்தமாக கருதப்படும்.

22. பத்தி 3.21-இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி குடியிருப்பு வகையை தவிர சிறப்பு கட்டிடங்கள், பன்னடுக்கு கட்டிடங்கள், தொழிற்சாலை, வணிக கட்டிடங்கள் மற்றும் இதர வகையான கட்டிடங்களுக்கு, (கல்வி நிறுவனங்கள் போன்றவை) மின் இணைப்பு வழங்குவதற்கு முன்பு கையொப்பமிடப்பட்ட அச்சு விண்ணப்பம் (Hard Copies) மற்றும் சுய சான்றளிக்கப்பட்ட ஆவணங்கள் பெறப்படும்.

23. குடியிருப்பு வகையை சார்ந்த விண்ணப்பதாரர், இணையதளத்தில் கிடைக்க செய்யப்பட்ட அசல் பரிசோதனை அறிக்கை/மாற்றியமைக்கப்பட்ட பரிசோதனை அறிக்கை (OTR/RTR) படிவங்களை, அந்த படிவங்களில் உள்ள உரிய விவரங்களை பூர்த்தி செய்து, இணையதளம் மூலமாக பதிவு ஏற்றம் செய்ய வேண்டும்.

24. பத்தி 3.23-இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி குடியிருப்பு வகையை தவிர சிறப்பு கட்டிடங்கள், பன்னடுக்கு கட்டிடங்கள், தொழிற்சாலை, வணிக கட்டிடங்கள் மற்றும் இதர வகையான கட்டிடங்களுக்கு, (கல்வி நிறுவனங்கள் போன்றவை) OTR/RTR தயார் செய்யப்பட்டு, மின் இணைப்பு வழங்கப்படும் பொழுது மின் நுகர்வோரால் கையொப்பமிடப்பட்டிருக்க வேண்டும்.

25. எல்லா நிகழ்வுகளிலும், புதிய மின் இணைப்பு/கூடுதல் மின்பளு இணைப்பு/மின் பளு குறைப்பு ஆகியவற்றை வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்ட பின்பு புதிய மின் இணைப்பு கூறில் (Module) OTR/RTR எண்ணை நிரப்ப வேண்டும்.

குறைந்த அழுத்த மின்இணைப்பு தொடர்பாக புதிய மின் இணைப்பு / கூடுதல் மின்பளு இணைப்பு/மின் பளு குறைப்புக்கான விண்ணப்ப முறையை மேற்கூறிய இணையதள விண்ணப்ப வாயிலாக தமிழகம் முழுவதும் செயல்படுத்தலாம்.

**(தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்/த.மி.உ.ம.ப.க. அவர்களின் ஆணைப்படி)**

**தலைமைப்பொறியாளர்/வணிகம்**




## அத்தியாயம் 3

## தண்டனைகள் பற்றி

**பிரிவு - 71 (Section & 71)**

பல்வேறு செய்கைகளில் ஒன்றோ ஒன்றுக்கு மேற்பட்டவையோ அதுவே அல்லது அவைகளே ஒரு குற்றமாக அமைந்திருந்து அவை ஒன்று சேரும்போது வேறொரு குற்றமாக அமையுமிடத்து அத்தகைய குற்றங்களில் ஏதேனும் ஒன்றிற்கு வழங்கக்கூடிய தண்டனையைக் காட்டிலும் அதிகக் கடுமையான ஒரு தண்டனையை விதித்து அக்குற்றவாளியைத் தண்டித்தல் கூடாது.

**பிரிவு - 72 (Section & 72)**

பல்வேறு குற்றங்களில் ஒன்றைச் செய்த ஒருவருக்கு அவற்றில் எந்தக் குற்றத்திற்கு என்பது பற்றி ஐயம் இருப்பதாகத் தீர்ப்பில் சொல்லுகிற போது, அக்குற்றங்களுக்கெல்லாம் ஒரே மாதிரியான தண்டனைக்கு வகை செய்யப்படவில்லையென்றால், அவற்றில் எந்தக் குற்றத்திற்கு மிகக் குறைந்த தண்டனைனோக்கு வகை செய்யப்பட்டுள்ளதோ, அந்தக் குற்றத்திற்காகக் குற்றவாளிக்குத் தண்டனை விதிக்கப்படல் வேண்டும்.

**பிரிவு - 73 (Sections 73 )**

கடுங்காவல் தண்டனை வழங்கப்படும் வழக்குத் தீர்ப்புகளில் ஆறு மாதங்கள் வரையிலான கடுங்காவல் தண்டனையில் ஒரு மாதத்திற்கு மேற்படாமலும், ஓர் ஆண்டு தண்டனைக்கு இரு மாதங்களும், ஓராண்டிற்கு மேற்பட்டால் மூன்று மாதங்களுமாக தனித்த சிறைவாசத்திற்கும் தீர்ப்பு வழங்கலாம்.

**பிரிவு - 74 (Section 74)**

தனிமைச் சிறை வாசத்திற்கான கால வரம்பானது மாதற்கு ஏழு நாட்கள் என்பதற்கு மேற்படலாகாது.

**பிரிவு - 75 (Section 75)**

மூன்று ஆண்டு கால அல்லது அதற்கு மேற்பட்டு, சிறை தண்டனை விதிக்கக் கூடிய தண்டனை பெற்ற நிலையில் அதே அளவு தண்டனை விதிக்கக்கூடிய மற்றொரு குற்றத்தையும் செய்தவராக இருந்தால் அத்தகைய குற்றங்கள் ஒவ்வொன்றிற்கும் ஆயுள் சிறை வாசத்திற்கோ அல்லது பத்து ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய இரு வகைச் சிறை வாசங்களில் ஏதேனும் ஒன்றிற்கோ உள்ளாக்கப்படல் வேண்டும்.

## அத்தியாயம் 4
## பொது விலக்குகள் - General Exceptions

**பிரிவு - 76 (Section & 76)**

சட்டப்படி ஒன்றைச் செய்வதற்குக் கட்டுப்பட்ட ஒருவரால் அல்லது பொருண்மை (நிகழ்வு) தவற்றின் காரணமாக அதைச் செய்வதற்குத் தாம் கட்டுப்பட்டிருப்பதாக நல்லெண்ணத்தோடு நம்புகிற ஒருவரால் செய்யப்படும் எதுவும் குற்றமாகாது.

**எடுத்துக்காட்டுகள்:-**

1) தமது மேல்நிலை அலுவலரின் கட்டளைப்படி சட்டத்தின் ஆணைகளுக்கிணங்கிய வகையில் தரைப்படை வீரர் ஒருவர் ஒரு கும்பலைப் பார்த்து சுடுகிறார். இங்கு தரைப்படை வீரரின் செயல் குற்றமாகாது.

2) நீதிமன்ற அலுவலர் ஒருவர் சேகர் என்பவரைக் கைது செய்வதற்கான நீதிமன்றக் கட்டளையின் பேரில் உரிய விசாரணைக்குப் பிறகு சேகர் என்பவருக்குப் பதில் சேது என்பவரைக் கைது செய்து விடுகிறார். இங்கும் நீதிமன்றக் காவலரின் செயல் குற்றமாகாது.

**பிரிவு - 77 (Section & 77)**

ஒரு நீதிபதி தமக்குச் சட்டத்தின் மூலம் கொடுக்கப்பட்டுள்ள அல்லது தமக்குக் கொடுக்கப் பட்டுள்ளதாகத் தாம் நல்லெண்ணத்தோடு நம்புகிற அதிகாரத்தைப் பயன்படுத்தி நீதிமுறையில் செயல்படும் போது அவரால் செய்யப்பட்ட எதுவும் தவறாகாது.

**பிரிவு - 78 (Sections 78)**

ஒரு நீதிமன்றத்திற்கு ஒரு குறிப்பிட்ட நிகழ்வில் தீர்ப்பு அல்லது கட்டளை பிறப்பிக்க அதிகாரம் இருந்திராவிட்டாலும், அதிகாரம் இருப்பதாக நல்லெண்ணத்தோடு நீதிமன்றம் ஒன்றினால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு அல்லது கட்டளையைத் தொடர்ந்து செய்யப்படும் அல்லது அந்தத் தீர்ப்பு அல்லது கட்டளையால் அதிகாரம் அளிக்கக்கப்படும் எதுவும் குற்றமாகாது.

**பிரிவு - 79 (Section 79)**

சட்டத்தின்படி நியாயமானதாக ஒருவரால் செய்யப்படும் அல்லது பொருண்மைத் (நிகழ்வு) தவறு காரணமாக சட்டத்தின்படி நியாயமானதென்று நல்லெண்ணத்தோடு ஒருவர் நம்பிச் செய்யும் செயல் குற்றமாகாது.

**எடுத்துக்காட்டு :-**

கொலை நடப்பதைப் பார்த்து கொலை செய்தவரைப் பிடித்து சட்டத்தின் முன் கொண்டு செல்லும் நபரின் செயலானது, தற்காப்புக்கான நிகழ்வு தான் கொலை அல்ல என்றானாலும் அவரின் குற்றம் ஆகாது.

**பிரிவு - 80 (Section 80)**

சட்டப்பூர்வமான ஒரு செயலைச் செய்கையில் ஏற்படும் எதிர்பாராமல் நிகழும் தற்செயல் நிகழ்வு எதுவும் குற்றமாகாது.

## பொது விலக்குகள் - General Exceptions

**பிரிவு - 81 (Section & 81)**

தீங்கு செய்யவேண்டும் என்ற உட்கருத்து இல்லாமலும், ஆளுக்கு அல்லது ஒரு சொத்துக்கு வேறு தீங்கு ஏற்படுவதைத் தடுக்கும் அல்லது தவிர்க்கும் பொருட்டு நல்ல எண்ணத்துடன் ஏதேனும் செய்யப்படுமானால், அது அநேகமாகத் தீங்கை விளைவிக்கக்கூடும் என்ற அறிவுடன் செய்யப்பட்டிருந்த போதிலும் குற்றமாகாது.

**பிரிவு - 82 (Section & 82)**

ஏழு வயதிற்குட்பட்ட ஒரு குழந்தையின் செய்கை எதுவும் குற்றமன்று..

**பிரிவு - 83 (Sections 83)**

ஒரு செய்கையைச் செய்யும் தருணத்தில் தன் நடத்தையின் தன்மையையும் அதன் விளைவுகளையும் நிதானித்து அறிந்து கொள்ளப் போதுமான பக்குவமடைந்திராத, ஏழு வயதிற்கு மேற்பட்ட ஆனால் பனிரெண்டு வயதிற்குட்பட்ட, குழந்தையால் செய்யப்படும் செயல் எதுவும் குற்றமாகாது.

**பிரிவு - 84 (Section 84)**

ஒரு செயலைச் செய்யும் காலத்தில் புத்தி சுவாதீனமில்லாத காரணத்தால், அச்செயலின் தன்மையை அல்லது தவறானதாகவோ, சட்டத்திற்கு மாறானதாகவோ இருக்கிற செய்கையைத் தாம் செய்கிறோம் என்பதை அறியும் திறனற்றவராக உள்ள ஒருவரால் செய்யப்படும் எதுவும் குற்றமாகாது.

**பிரிவு - 86 (Section 86)**

ஒரு செய்கையானது குறிப்பிட்ட அறிவுடன் அல்லது உட்கருத்துடன் செய்யப்பட்டாலன்றி குற்றமாகாது என்ற நேர்வுகளில், அவருக்குப் போதை உண்டாக்கிய பொருள் அவருக்குத் தெரியாமல் அல்லது அவரது விருப்பத்திற்கு மாறாக அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்தாலன்றி, அவரது நடவடிக்கைக்கு அவரே முழுப் பொறுப்பாவார். சுய அறிவுடன் செய்ததற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு அவர் உள்ளாவார்.

**பிரிவு - 87 (Section & 87)**

18 வயதிற்கு மேற்பட்டு இருந்து குற்ற நோக்கின்றி அதாவது மரணம் அல்லது கொடுங்காயம் ஏற்படுத்தும் உள்நோக்கமின்றி நேரடியாகவோ அல்லது உட்கிடையாகவோ இசைவு பெறப்பட்டு அதன் காரணமாக செய்யப்பட்ட எந்தத் தீங்கும் குற்றமாகாது.

**பிரிவு - 88 (Section & 88)**

மரணம் விளைவிப்பதைத் தவிர இதர அனைத்து செயல்களுக்கும் தீங்கினால் பாதிக்கப்பட்டவரின் தன் இசைவு செயல்பாட்டை நீட்டிக்கிறது. செய்யப்பட்ட செயல் அத்தகைய இசைவினை அளித்த நபர்களின் நன்மைக்காக நன்னம்பிக்கையின் பேரில் செய்யப்பட வேண்டும்.

**பிரிவு - 89 (Sections 89)**

இப்பிரிவின்படி இசைவினை 12 வயதுக்குட்பட்டவர்களுக்கும் மனநிலை சரியில்லாதோருக்கும் அவர்களது பாதுகாவலர்கள் மட்டுமே வழங்க முடியும். அத்தகைய இசைவானது நன்னம்பிக்கையின் பேரிலும் குழந்தை அல்லது மனநிலை சரியில்லாதவர்களின் நன்மைக்காகவும் தர வேண்டும். இங்கு குற்ற எண்ணமின்றி தீங்கு விளைவிக்கின்ற நபரும் அவர்களது நன்மைக்காக இசைவு தந்த பாதுகாவலரும் தண்டிக்கப்பட முடியாது. ஆனால் பிரிவுகள் 87, 88 89 மூலம் மரணம் விளைவித்தல் மற்றும் கொடுங்காயம் ஏற்படுத்துதல் போன்ற குற்றங்களை நியாயப்படுத்த முடியாது.

ஒரு அபாயமான செயலுக்கு சம்மதம் பெறப்பட்டு அதன் காரணமாக மரணம் ஏற்பட்டால் குற்றவாளிக்குக் குறைந்தபட்ச தண்டனை வழங்கப்பட்டாலும், செயலே சட்டவிரோதமானது எனில் இசைவு என்ற அடிப்படையில் மறுப்புரை அனுமதிக்கப்பட மாட்டாது.

**பிரிவு - 90 (Section 90)**

பயத்தின் அடிப்படையில் அல்லது தவறான கருத்தின் கீழ் அல்லது தீங்கின் காரணமாக இசைவு அளிக்கப்பட்டிருந்தால் அது செல்லுபடியாகாது. குற்றவியல் வழக்குகளில் இசைவானது மேலாதிக்கம், மோசடி மற்றும் சொத்தழிப்பு போன்றவைகளால் களங்கப்படுவதில்லை. கீழ்க்கண்டவைகள் இசைவு ஆகாது.

12 வயதிற்குட்டவர்களால் தரப்படும் இசைவு, மனநிலை சரியில்லாதவரால் தரப்படும் இசைவு, மது, போதை மயக்கத்தில் உள்ள நபரால் தரப்படும் இசைவு, தவறான கருத்து காரணமாக அல்லது தீங்கு ஏற்படலாம் என்ற பயத்தில் தரப்படும் இசைவு.